**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 31/2025**

**Prosecution Witness : 7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. மணிகண்டன்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. பெத்தன்** | **Calling** | : | **விவசாயம்** |
| **Village** | : | **நரியூத்து, நிலக்கோட்டை** | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **38** |
| | | | **Dated** | : | **07.10.2025** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**எதிரி ஆஜரில்லை, பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

அ.சா. 7 (பட்டியல் சாட்சி 8), **திரு. மணிகண்டன்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>முதல் விசாரணை :–</u>

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது அல்ல. என்னுடைய குடும்ப பிரச்சனைக்காக திண்டுக்கல் மகளிர் காவல் நிலையத்தில் தான் நான் ஒரு கையெழுத்துப் போட்டேன். இந்த வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. என் முன்பாக யாரையும் கைது செய்யவில்லை, யாரிடமும் ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை மற்றும் எந்த பொருளையும் கைப்பற்றவில்லை.

அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சி பிறழ் சாட்சியாக மாறிவிட்டதால் அரசு தரப்பில் அவரை குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதி கேட்டதன் பேரில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

கடந்த 25.05.2024ம் தேதி திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மேற்கு வாசல் அருகே நானும், எங்கள் ஊரைச் சேர்ந்த முருகேசன் என்பவரும் நின்று கொண்டு இருந்தபோது, அங்கு வந்த திண்டுக்கல் தாலுகா காவல் ஆய்வாளரை பார்த்ததும் இந்த வழக்கின் எதிரி விஸ்வநாத் தப்பி செல்ல முயன்றதாகவும், அவரை போலீசார் சுற்றி வளைத்து பிடித்ததாகவும், எந்தவித அச்சுறுத்துதலோ, துன்புறுத்துதலோ, ஆசை வார்த்தைகளோ இன்றி அவர் தானாக முன் வந்து போலீசாரிடம் ஒப்புல் வாக்குமூலம் கொடுத்ததாகவும், அதன் அடிப்படையில் இந்த வழக்கு சம்பவத்திற்கு எதிரி பயன்படுத்திய இரண்டு கத்திகளையும், இரத்த கறை படிந்த சட்டையையும், அவருடைய பைக்கின் சீட்டுக்கு அடியில் மறைத்து வைத்து இருந்ததை எடுத்துக் கொடுப்பதாக ஒப்புல் வாக்குமூலம் அளித்ததன் பேரில், அவற்றை போலீசார் கைப்பற்றியதாகவும், அந்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் அத்தாட்சியில் நானும், முருகேசனும் கையொப்பம் செய்ததாகவும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு பயந்து உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

Taken down by me/before me in open court on 07.10.2025 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

(Sd/..) Tmt.V. Deepa,
Chief Judicial Magistrate,
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**
**DINDIGUL.**
**S.C. 31/2025**
**Prosecution Witness : 8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. முருகேசன்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. பெரியண்ணன்** | **Calling** | : | **விவசாய கூலி** |
| **Village** | : | **நரியூத்து, நிலக்கோட்டை** | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **60** |
| | | | **Dated** | : | **07.10.2025** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

**எதிரி ஆஜரில்லை, பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

அ.சா. 8 (பட்டியல் சாட்சி 9), **திரு. முருகேசன்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை :–</u>**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது அல்ல. என்னுடைய குடும்ப பிரச்சனைக்காக திண்டுக்கல் தாலுகா காவல் நிலையத்தில் தான் நான் ஒரு கையெழுத்துப் போட்டேன். இந்த வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. என் முன்பாக யாரையும் கைது செய்யவில்லை, யாரிடமும் ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை மற்றும் எந்த பொருளையும் கைப்பற்றவில்லை.

அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சி பிறழ் சாட்சியாக மாறிவிட்டதால் அரசு தரப்பில் அவரை குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதி கேட்டதன் பேரில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

<u>**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-**</u>

கடந்த 25.05.2024ம் தேதி திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மேற்கு வாசல் அருகே நானும், எங்கள் ஊரைச் சேர்ந்த மணிகண்டன் என்பவரும் நின்று கொண்டு இருந்தபோது, அங்கு வந்த திண்டுக்கல் தாலுகா காவல் ஆய்வாளரை பார்த்ததும் இந்த வழக்கின் எதிரி விஸ்வநாத் தப்பி செல்ல முயன்றதாகவும், அவரை போலீசார் சுற்றி வளைத்து பிடித்ததாகவும், எந்தவித அச்சுறுத்துதலோ, துன்புறுத்துதலோ, ஆசை வார்த்தைகளோ இன்றி அவர் தானாக முன் வந்து போலீசாரிடம் ஒப்புல் வாக்குமூலம் கொடுத்ததாகவும், அதன் அடிப்படையில் இந்த வழக்கு சம்பவத்திற்கு எதிரி பயன்படுத்திய இரண்டு கத்திகளையும், இரத்த கறை படிந்த சட்டையையும், அவருடைய பைக்கின் சீட்டுக்கு அடியில் மறைத்து வைத்து இருந்ததை எடுத்துக் கொடுப்பதாக ஒப்புல் வாக்குமூலம் அளித்ததன் பேரில், அவற்றை போலீசார் கைப்பற்றியதாகவும், அந்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் அத்தாட்சியில் நானும், மணிகண்டனும் கையொப்பம் செய்ததாகவும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு பயந்து உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

Taken down by me/before me in open court on 07.10.2025 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

(Sd/..) Tmt.V. Deepa,
Chief Judicial Magistrate,
Dindigul.